# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

பி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

MERRY CHRISTMAS

## டிசம்பர் 2022 (மடல் – 22) செய்தி - 11

"அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத்தேயு 1:23).

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 8 |
| Children's Corner | 12 |
| வேத வினாக்கள் | 22 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 30 |

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயராலே வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டவரின் பெரிதான கிருபையினாலே இந்த ஆண்டின் கடைசி மாதத்தைக் காணச் செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதத்திலும் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.

இந்த மாதத்திற்கான வாக்குத்தத்த வசனம் : **"அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத்தேயு 1:23).**

**"A virgin will be wtih child and will give birth to a son, and they will call Him 'Immanuel' - which means, 'God with us' " (Matthew 1:23).**

ஏசாயா 7:14-ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம்: "ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தைக் கொடுப்பார். இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள்" என்பதாகும். இந்த தீர்க்கதரிசனம் ஏசாயாவின் காலத்திற்கு 700 ஆண்டுகளுக்குப் பின் நிறைவேறியது.

இந்த வாக்குத்தத்த நற்செய்தி தேவன் நம்மோடிருக்கிறார் என்பதை நினைப்பூட்டும் காலமாக இந்த காலம் அமைந்திருக்கிறது. நம்பிக்கை இழந்த மக்களுக்கு நம்பிக்கை கொடுத்தது, வாழ்வு இழந்த மக்களுக்கு புது வாழ்வை கொடுத்தது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வந்தபோது எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுப்பவராக (லூக்கா 2:10) வந்தார். மேய்ப்பர்களுக்கு பயத்தை நீக்கி சந்தோஷத்தை அருளினது.

வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற வாக்குத்தத்தம் நம்மை உயிரூட்ட செய்கிறது. புது நம்பிக்கையைத் தருகிறது. தொடர்ந்து, மத்தேயு 28:20-ல், "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடு இருக்கிறேன்" என்று கூறி இன்றும் நம்மோடு இருக்கிறார். ஆகவே, இம்மானுவேல் தேவன் நம்மோடு இருக்கிறார். பாவத்திலிருந்து, சாபத்திலிருந்து, வியாதியிலிருந்து, மரண பயத்திலிருந்து நாம் விடுதலை பெற்றிருக்கிறோம் என்ற நிச்சயத்தோடு கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை அர்த்தமுள்ள ஒரு பண்டிகையாக கொண்டாடுவோம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

**உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்!**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : jerirajkumar@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
*அருள்திரு. ஜெர்ரி ராஜ்குமார்.* C

## ஜனவரி மாத தலைப்பு

# புது நம்பிக்கை [New Hope]

## போராட்டமும் கொண்டாட்டமும்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்போடு கூட வாழ்த்துகிறேன். ஆண்டவரின் பெரிதான கிருபையால் இந்த வருடத்தில் 11-மாதங்களை கடந்து கடைசி மாதமான விசேஷமான டிசம்பர் மாதத்திற்குள் பிரவேசித்துள்ளோம். கடந்த ஒவ்வொரு நொடி பொழுதும் நம்மை ஆசீர்வதித்து வழி நடத்திய ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

கடந்த மாதங்கள் முழுவதும் நாம் எஸ்தர் புஸ்தகத்தை தியானித்து அநேக காரியங்களைக் கற்று கொண்டோம். அதற்காய் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். இம்மாதம் எஸ்தர் புஸ்தகத்தின் நிறைவு பகுதியை 'கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்!' என்ற தலைப்பின் கீழ் சிந்திக்கலாம்.

எஸ்தர் புஸ்தகம் மொத்தம் பத்து அதிகாரங்கள் தான். முதல் ஐந்து அதிகாரங்கள் சதித்திட்டம், கொலைச்சட்டம், தூக்குமரம் என பயங்கரமாக இருக்கும். கடைசி ஐந்து அதிகாரங்களில் கர்த்தரின் பிள்ளைகளின் கொண்டாட்டத்தை அழகாக காணலாம்.

ரோமர் 8:37-ன் படி, "நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோமே." என்னதான் சத்துரு திட்டம் போட்டாலும், வெற்றி கர்த்தரின் பிள்ளைகளுக்கே. நமக்கு விரோதமான சத்துருவின் திட்டங்களை முறியடிக்கவே கர்த்தர் நம்மோடு இருக்கிறார். அவர் சேனைகளின் கர்த்தர். வல்லமை நிறைந்தவர். யுத்தத்தில் சிறந்தவர்.

"யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமுமுள்ள கர்த்தர். அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே" (சங்கீதம் 24:8).

ஆம் பிரியமானவர்களே, உங்களுக்கு விரோதமாய் திட்டம் போட்டாலும் சரி, சட்டம் போட்டாலும் சரி. உங்கள் மேல் ஒருவராலும் கை வைக்க முடியாது. உங்களைத் தொடுகிறவன் உங்களைக் காக்கும் கர்த்தரின் கண்ணின் மணியைத் தொடுகிறான்.

ஆம் உங்கள் வாழ்வில் வெற்றியை, எஸ்தர் வாழ்வில் செயல்பட்டவர் செயலாற்றுவார். எஸ்தர் புஸ்தகம் வாழ்வில் நம்பிக்கையூட்டும் நம்பிக்கை புஸ்தகம். உங்கள் வெற்றியை தரிசனமாய் காணச் செய்யும் தரிசனப் புஸ்தகம்.

"நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும்

காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத்.14:13,14).
யுத்தம் கர்த்தருடையது!
ஜெயம் உங்களுடையது!
தோல்வி சாத்தானுடையது!

கொண்டாடுங்கள் வெற்றியை இஸ்ரவேலின் இராணுவங்களின் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்னும் நாமத்திற்கே வெற்றி கிடைத்ததே? தாவீதின் கரத்தில் ஆயுதமொன்றுமில்லை. பயமுறுத்திய கோலியாத் ஆயுதத்தையே எடுத்து அவனை வீழ்த்தியது அற்புதமல்லவா? எஸ்தரின் சரித்திரமும் அப்படித்தான், ஆமான் எடுத்த ஆயுதம் அவனுக்கே விரோதமாய் மாறிவிட்டது.

உங்கள் வாழ்விலும் அப்படியே செய்வார். உங்களுக்கு விரோதமான ஆயுதங்கள சாதமாய் மாற்றி வெற்றி தருவார். வெற்றியைக் கொண்டாடுங்கள்.

தேவ நாமத்தை உயர்த்துங்கள். துதியும், கனமும், மகிமையும் அவருக்கே! அவர் ஒருவருக்கே! ஆமென். வாசியுங்கள் எஸ்தர் புஸ்தகத்தை. அறிந்து கொள்ளுங்கள் தேவ திட்டத்தை. கொண்டாடுங்கள் உங்கள் வெற்றியை. எதிர் வருகின்ற புத்தாண்டு 2023 உங்களுக்கு ஆண்டவரின் கிருபையும், ஆசீர்வாதமுமாய் இருப்பதாக!

**அனைவருக்கும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

இப்படிக்கு
உங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கும்
**திருமதி. *ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்***
**ஆயரம்மா**

# ஆண்கள் பகுதி

## சமாதானப் பிரபு

இயேசுவின் முதலாம் வருகைக்குத் தன்னை ஆயத்தப்படுத்தியிருந்த சிமியோன், அவன் தேவபக்தியுள்ளவன், அவன் நீதியுள்ளவன், அவன் பரிசுத்த ஆவியானாலே நிரப்பப்பட்டவன், அவன் மேசியாவின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தான். சிமியோன் இயேசுபாலகனைக் கண்டு, அவரைத் தனது கைகளில் ஏந்தி, **"... உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்" (லூக்.2:29-32).** இயேசு பாலகனைக் கையிலே ஏந்தினதே அந்த சிமியோனுக்கு அத்தனை சமாதானம் என்றால், அவரை நமது உள்ளங்களில் ஏந்தினவர்களாக இருக்கும் பொழுது, நமக்கு எத்தனை சமாதானம்!

இதைச் சொல்லும்பொழுது, இன்னொன்றுங்கூட என் சிந்தனைக்கு வருகிறது. அன்று மரியாள் எலிசபெத்தைச் சந்திக்கும்படியாகப் போகிறாள். அந்த எலிசபெத்து மரியாளைப் பார்த்து, ஒரு வார்த்தை சொல்லுகிறாள்: **"என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்த பாக்கியம் என்று";** யோசித்துப் பாருங்கள்!

இயேசுவின் தாயாராகிய மரியாளைக் கண்டதே, அந்த எலிசபெத்துக்கு அத்தனை சந்தோஷமானால், அந்த இயேசுவையே தங்கள் வாழ்க்கையிலே காண்பதும், தரிசிப்பதும், அவரைக் கொண்டவர்களாக இருப்பதும் எத்தனை சந்தோஷம்! அதைப்போலவே, இங்கே சிமியோன் இயேசுவை கையிலே ஏந்தினதே அத்தனை சமாதானம் என்றால், இயேசுவை உள்ளத்திலே ஏந்தி, வாழ்க்கையிலே ஏந்தி, வாழ்கிறவர்களுக்கு எவ்வளவு பெரிய சமாதானம்!
அருமையானவர்களே! இன்றைக்கு உலகம் சமாதானத்தைத் தேடுகிறது. இந்த சமாதானத்திற்காக மக்கள் பற்பலவிதங்களிலே முயற்சி செய்கிறார்கள். இன்றைக்கு உலகத்தின் நிலவரத்தைப் பார்த்தால், தனிப்பட்ட வாழ்க்கையிலே மக்களுக்கு சமாதானமில்லை. அநேக மக்களுக்குக் குடும்பத்திலே சமாதானமில்லை. சிலருடைய வாழ்க்கையைப் பார்க்கும்போது, அவர்களுடைய தொழிலிலே, அவர்களுடைய பணியில், அவர்களுக்கு சமாதானமில்லை என்கிற நிலை வருகிறது. ஏன், உலகத்தின் நிலையை எடுத்துக்கொண்டாலும் கூட, ஆங்காங்கே சச்சரவு, போராட்டம், பகைகள், எதிர்ப்புகள், கொலை, கொள்ளை இப்படிப்பட்ட காரியங்களைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு உலகம் முழுவதிலுங்கூட மக்களுக்கு சமாதானம் இல்லை என்கிற நிலையிலேதான் உலகமும் சென்று கொண்டிருக்கிறது.

வேதத்தின் அடிப்படையிலே, இயேசுவான வரைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம், **"அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசா.9:6)** என்பதாகும். அவர் சமாதானத்தை உலகத்திலே கொண்டு வந்தார். ஆம், அந்த சமாதானப் பிரபுவைக் கையிலே ஏந்தினது சிமியோனுக்கு அத்தனை சமாதானம்! நீங்கள் வேதத்தின் அடிப்படையிலே இயேசுகிறிஸ்துவினுடைய பிறப்பின் துவக்கம் முதல் பார்த்தால், எல்லாம் சமாதானம் என்கிற நிலைமையிலேயே இருக்கிறது என்று பார்க்கலாம். அவர் பிறந்தபொழுது

*தூதர்கள்,* ***"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை, பூமியிலே சமாதானம்"*** *எனப் பாடினார்கள்.*

*அத்தோடு முடிந்துவிடவில்லை. இயேசுவானவர்* ***"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்"*** *என்று பிரசங்கித்தார். அவர் தமது சீஷர்களைப் பிரசங்கிக்க அனுப்பினார். என்ன சொல்லி அனுப்புகிறார் தெரியுமா? நீங்கள் ஒரு வீட்டிற்குள் நுழையும்போது,* ***"அந்த வீட்டுக்கு சமாதானம்"*** *என்று சொல்லி வாழ்த்துங்கள். அது மட்டுமல்ல பிரியமானவர்களே, அவருடைய பாடுகளின்போது எதிரிகளாய் இருந்த இருவர் சமாதானமடைந்ததைப் பார்க்கிறோம். ஏரோதுக்கும், பிலாத்துவுக்கும் ஒரு பெரிய கசப்பு இருந்ததாம். ஆனால் இயேசுவின் பாடுகளை முன்னிட்டு, பிலாத்துவும் ஏரோதுவும் ஒரு சமாதானத்துக்குட்பட்டார்கள் என்பதை நாம் வேதத்தின் வாயிலாக அறிகிறோம். நெடுநாள் அவர்களுக்குள்ளே இருந்த அந்த சமாதானக் குறைவு, அந்த கசப்பு, அந்த விரோதம், எல்லாம் இயேசுவின் பாடுகளை முன்னிட்டு மாறிப்போனது. அங்கேயும் அவர் சமாதானப் பிரபுவாக, சமாதானக் காரணராக செயலாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*அவர் உயிரோடே எழுந்த பிறகும்கூட, தம்முடைய சீஷர்களுக்கு என்ன சொன்னார்? தெரியுமா? "உங்களுக்கு சமாதானம்!" என்று சொன்னார். உண்மைதான்! இப்படிப்பட்டவரை கையிலே ஏந்தி, அந்த சிமியோன் சொல்கிறான்: "உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே, அதாவது மனநிறைவுடனே நீர் போகவிடுகிறீர்" என்பதாக அவன் கூறினான்.*

*இந்நாளிலும், இந்தச் செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் சகோதரனே, சகோதரியே! உன் வாழ்க்கையிலே மனசமாதானம் இல்லையா? நீ என்ன நினைக்கிறாய்? வேறு எந்த வழியிலாவது, விதத்திலாவது நீ சமாதானத்தைக் கண்டடையலாம் என்று நினைக்கிறாயா? சமாதானம் அடைவதற்கு ஒரேயொரு வழி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே! அவரையல்லாமல் வேறு வழியில்லை.* ***"என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்"*** *என்றார்.*

*சமாதானப் பிரபு இயேசுகிறிஸ்து. அவரைப் பற்றிக்கொண்டால், அவரை ஏற்றுக்கொண்டால், இன்றைக்கு நம்முடைய வாழ்க்கையிலே நிச்சயம் சமாதானம் உண்டு. இயேசுகிறிஸ்துவை புறக்கணித்துவிட்டு, நம்முடைய வாழ்க்கையிலே சமாதானத்தை நாம் கண்டடையவே முடியாது. சிமியோன் கர்த்தருடைய வருகைக்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் காத்திருந்தவன்; சிமியோன் கிறிஸ்து இயேசுவைக் கையிலே ஏந்தி சமாதானத்தைக் கண்டடைந்தவன். நீயும் அவரை இரட்சகராக ஏற்று உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளமாட்டாயா?*

*கிறிஸ்துவில் அன்புடன்,*
**Jayachandra Raja**

## சமாதான பிரபு




இன்றைய நாளில் நாம் எங்கு பார்த்தாலும் அன்பு தாழ்ச்சி, பகைமை, யுத்தங்கள், பஞ்சம், பொருளாதார வீழ்ச்சி, இயற்கை சீற்றங்கள், கொள்ளைநோய், அநியாயங்கள் என மனதின் அமைதியை கெடுக்கிற காரியங்களே நடந்து கொண்டிருக்கின்றன. இதன் நடுவில் நாம் எவ்வாறு அமைதியை காண முடியும்? அமைதி வேண்டுமெனில் மனதில் சமாதானம் வேண்டும்.

**சமாதானம் என்றால் என்ன?**

சமாதானம் என்பது கஷ்டமே இல்லாத வாழ்க்கையினிமித்தம் உண்டாவது இல்லை. எத்தகைய சூழ்நிலையில் நாம் வாழ்ந்தாலும், எல்லா நிலையிலும், ஒரு நிறைவையும், செய்யும் காரியங்களில் வளர்ச்சியையும், பூரண அமைதியையும் தெளிவையும் மனதில் தருவதே சமாதானம் ஆகும்.

**சமாதானத்தை அடையும் வழி**

- **விசுவாசம்**

நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1). இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, அவருடன் ஐக்கியமாகிறோம். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆட்கொண்டு நம்மை சமாதானத்துக்கு ஏதுவாக நடத்துவார். ஆவியின் கனிகளில் ஒன்று சமாதானமாகும். தேவனோடு ஐக்கியம் கொண்டு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு வாழும்போது, சமாதானம் தானாக வந்து நம்மை ஆட்கொள்ளும். ஏசாயா26:3 சொல்லுகிறபடி கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொண்டு, அவரை நம்பி இருக்கும்போது அவர் நம்மை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வார். அது உலகம் கொடுக்கக் கூடாத சமாதானம். பூரண சமாதானம்.

- **வேதவாசிப்பு**




வேத வசனத்தை நாம் ஆராய்ந்து அதை மனதில் இருத்தி வாழும்போது நம் மனம் சமாதானத்தால் நிரம்பும். உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு. அவர்களுக்கு இடறலில்லை என்று சங்கீதம் 119:165 கூறுகிறது. அவருடைய வேதத்தை நேசித்து அனுதினமும் நாம் கருத்தாய் தியானிக்கும்போது தெய்வீக வழிநடத்துதலை நாம் உணர முடியும். திக்கு தெரியாது நாம் தடுமாறும்போது அது நம்மை

வழிநடத்தும். இருளடைந்த சூழலில் தவிக்கும்போது வேதம் நமக்கு தீபமாய் வழி காட்டும். சமாதானம் பூரணமாய் நம்மை காத்துக்கொள்ளும்.

### ஜெபம்

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் தேவனிடம் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் காத்துக்கொள்ளும் என்று பிலி.4:6,7 கூறுகிறது. நாம் நம்முடைய ஜெபத்தில் நம் விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் தோத்திரத்துடன் தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று வேதம் நமக்கு போதிக்கிறது. அதாவது ஜெப



வாழ்க்கை நமக்கு மிகவும் அவசியமாகும். வேதத்தில் காணும் நம் முன்னோர்கள் ஜெபத்தில் தரித்து தேவனோடு ஐக்கியமாய் இருந்ததால், சிங்கம் வந்தபோது, கோலியாத் வந்தபோது, மகனை பலிகொடுக்க வேண்டிய கட்டாயம் வந்தபோது, அடிமையாய் கொண்டுப்போகப்பட்ட போது, சமாதானத்தை இழக்காமல் தைரியாமாய் நின்று வெற்றி பெற்றனர். அதாவது தேவன் தரும் சமாதானம் எந்த சூழ்நிலையிலும் நமக்கு சமாதானம் தரும். அவரிடம் ஜெபித்து அதை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

### தேவனோடுள்ள உறவு

ஆண்டவரோடு நமக்குள்ள உறவில் விரிசல் வராது நாம் காத்துக் கொள்வோமாயின், எந்த ஒரு காரியமும் நம் சமாதானத்தை நம்மை விட்டு பிரிக்க முடியாது. நாம் மட்டுமல்ல, நாம் மற்றவர்களும் சமாதானமாய் வாழ உதவ முடியும். சாமாதானம் பண்ணுகிறவர்கள்



பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்று மத்தேயு 5:9 கூறுகிறது. சமாதான கர்த்தரோடுள்ள உறவு சரியாய் இருக்கும்போது, நாம் மற்றவரோடு கொண்டுள்ள உறவும் மிகவும் சரியாக இருக்கும். அப்போது ரோமர் 12:16-18 கூறப்பட்டுள்ளதுபோல நாம் ஒருவரோடு ஒருவர் ஐக்கியத்துடன் மன மேட்டிமையின்றி வாழ முடியும்.

சமாதானத்தின் தேவனோடு சேர்ந்து நடப்போம். அப்பொழுது உபாகமம் 6:24-26-ல் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதத்தின்படி, கர்த்தர் தம்முடைய முகத்தை நம்மேல் பிரசன்னமாக்கி, நமக்கு சமாதானம் கட்டளையிடுவார்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### நேசிக்கப்படத்தக்க பெண்மான்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். 2022-ம் வருடத்தின் கடைசி மாதத்திற்குள் அடியெடுத்து வைக்கிறோம். இம்மட்டுமாய் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வந்த தேவாதி தேவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி பலிகளை ஏறெடுப்போம். கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி, அன்பு, சந்தோஷம், சமாதானம் நம் எல்லாரையும் சூழ்ந்து கொள்ளட்டும் என்று ஜெபிப்போம்.

பெண்களாகிய நம்மை மிகவும் அழகாக தேவன் படைத்திருக்கிறார். உள்ளான அன்பு, சமாதானம், கீழ்ப்படிதல், விசுவாசம், சாந்தம் தயவு நம் உள்ளத்தில் காணப்படும் போது நம் முகத்தில் அழகு வருகிறது. ஆனால் சில நேரங்களில் கசப்புகளை, வெறுப்புகளை, இருதயத்திலே சுமந்துகொண்டு, அழகில் குறைவுபடுகிறவர்களாகக் காணப்படுகிறோம். நீதி.5:19, நாம் நேசிக்கப்படத்தக்க பெண்மான் என்று சொல்கிறது. தேவன் நம் ஒவ்வொருவரையும், அவருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்களாய் பார்க்கிறார். நாம் தேவனைப் புகழ்ந்து பாடி துதிக்கும்போது நம்மை நேசிக்கிறார். நாம் அவரைத் தேடும்போது நமக்கு சமீபமாயிருக்கிறார். சில நேரங்களில் நம்மை நேசித்து, கண்டித்து உணர்த்துகிறார். தேவனுக்கு பிரியமில்லாத காரியங்கள் செய்யும்போது சிட்சிக்கிறார். நாம் ஒவ்வொருவரையும், நம்முடைய கணவர், பிள்ளைகள் நேசிக்கிறவர்களாக காணப்படவேண்டும். அப்படியென்றால் தேவ ஆசீர்வாதம் நம் குடும்பத்தில் பரிபூரணமாய் உண்டாகும். அங்கே சமாதானம் காணப்படும்.


நாம் கனிதரும் திராட்சைக்கொடி (சங்.128:3). வேதம் நம்மை கனிதரும் திராட்சைக் கொடி என்று கூறுகிறது. கனி என்றால் இனிப்பு தன்மைக் கொண்டது. அதில் கசப்பு, புளிப்பு, காரம், உவர்ப்பு காணப்படாது. இனிப்பான கனியைத் தான் எல்லாரும் விரும்புவார்கள். நம்முடைய வாழ்க்கையிலும், நாம் கனிகொடுக்கிறவர்களாக காணப்பட வேண்டும். யாரும் விரும்பாத கசப்பு, வெறுப்பு,

கோபம், வைராக்கியம் இவையெல்லாம் இருந்தால் நாம் கனியாய் இருக்க முடியாது. அன்பினால் சகலத்தையும் தாங்குகிறவர்களாய், சகிக்கிறவர்களாய், நம்புகிறவர்களாய் காணப்பட வேண்டும். எல்லாரையும் அனுசரித்து போகிற தன்மை இருந்தால்தான் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும். குறைவுகளை நிறைவாக்குகிற கர்த்தர் நம்மோடு இருக்கிறார். அன்பாகிய கனியை வெளிப்படுத்தும்போது சந்தோஷமும் சமாதானமும் உண்டாகும். அநேக நேரங்களில் அன்பற்றவர்களாக காணப்படுகிறோம். இந்த வருடத்தின் கடைசியில் வைக்கப்பட்டிருக்கிறோம். குறைவுகளை நிறைவாக்கும் தேவனிடத்தில் ஜெபிப்போம். கடைசி காலத்தில் அன்பு தணிந்து போம் என்கிற வேத வாக்கியம் நிறைவேறிக் கொண்டு வருகிறது. கர்த்தருக்கு பயப்படுவோம். பிசாசானவன் பிரிவினை, சண்டை, சந்தேகம் போன்ற கனியைக் காட்டிக் குடும்பத்தில், சபைகளில், சமுதாயத்தில் பிரச்சனையை ஏற்படுத்த தயார் நிலையில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். கடிந்து ஜெபிப்போம். சமாதானம் பெருகும். பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். ஒவ்வொரு நாளும் தேவனின் பலத்த கைக்குள் அடங்கி இருப்போம். பிசாசானவன் முதலில் நம்மைத் தான் சோதிக்கிறான். விழித்திருப்போம். அப்பொழுது தான் நிலையான சந்தோஷமும், சமாதானமும், அன்பும் பெருகும். அனைவராலும் நேசிக்கப்படத்தக்க பெண் மான்களாகவும், கனிதரும் திராட்சைக் கொடியாகவும் எழும்பி பிரகாசிக்க கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் சூழ்ந்துகொள்ள வாழ்த்துகிறேன்!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

# CHILDREN'S CORNER

Dear Children,




This month we are celebrating the Advent season. Advent means 'Arrival'.

We are celebrating the arrival of Jesus Christ.

God gave his son as a peace offering.

God gave us his son as a gift that we should receive by faith.

Wherever Jesus rules, he brings perfect peace!


The theme for the month of December is "**PRINCE OF PEACE**".

## HOW CAN WE UNDERSTAND THIS PEACE?



1. It is a **WINNING PEACE** - Jesus Christ fought and defeated the Enemy of our souls, freeing us to live at peace with God. (Ephesians 2:14)

2. It is a **RECEIVING PEACE** - Jesus told His disciples that He gives peace of a different quality than the world gives (John 14:27).





**3.** It is an **EXPERIENCING PEACE** - We are commanded to let the peace of Christ rule in our hearts (Colossians 3:15).

Since Jesus, the Son of God has become the Prince of Peace, we the children of God, need to strive to become peacemakers with Jesus. (Matthew 5:9, Isaiah 57:19).

**"For To Us A Child Is Born, To Us A Son Is Given, And The Government Will Be On His Shoulders. And He Will Be Called Wonderful Counselor, Mighty God, Everlasting Father, Prince Of Peace." (Isaiah 9:6).**


# THE LETTERS OF 1st, 2nd and 3rd John








| 1st John | 2nd John | 3rd John |
|---|---|---|
| Author - John | | |
| Date written – AD 85 | Date written – AD 86 | Date written – AD 86 |
| Chapters - 5 | Chapters - 1 | Chapters - 1 |
| Summary - **The promise of eternal life comes through knowing Jesus. Jesus is light and Jesus is Love.** | Summary - The church to be on guard, to walk in obedience to the commandments of God. | Summary - Believers are not to imitate evil but good. |

## SAYING IT WITH PICTURES




But if we walk in the light, as he is in the light, we have fellowship with one another, and the blood of Jesus, his Son, purifies us from all sin.
– 1 John 1:7 NIV





If we confess our sins, he is faithful and just and will forgive us our sins and purify us from all unrighteousness.
– 1 John 1:9 NIV

# TINY TOTS SECTION

## COLOR IN...

Coloring Page



**Isaiah Prophesies of Jesus Christ's Birth**


*For unto us a child is born, unto us a son is given: . . . and his name shall be called Wonderful, Counsellor, The mighty God, The everlasting Father, The Prince of Peace* (Isaiah 9:6).

## Find out 6 differences between the two pictures below





## Help the wise men find their way to Jesus – the Prince of Peace!





What's in the Stable?

Circle the things that you might find in the stable where Jesus was born.



BibleWise

# To Bethlehem

**Jesus Is Born**
—Luke 2

Mary and Joseph traveled to Bethlehem to be counted in a census. Follow their path and color in every other stone starting with the second one. Read the uncolored stones to find out what happened when they got to Bethlehem.



Used by permission: Bible Puzzles for Kids Ages 6-8. Cincinnati: Standard Publishing Group, © 2006

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION FROM THE BOOKS OF 1ST, 2ND AND 3RD JOHN [kjv]

1. what did John say that God is that began with the letter "L"? (1st John 1:5,4:8)

a. Lamb of God b. Light; Love
c. Both a and b d. None of the above

2. What did John say his hands had handled? (1st John 1:1)

a. Bread b. Water turned to wine
c. Word of Life d. All of the above

3. What did John say cleanses us from all sin? (1st John 1:7)

a. Blood of Jesus b. Water baptism
c. Word of God d. All of the above

4. If a Christian does sin what does he have? (1st John 2:1)

a. An advocate, Jesus Christ b. A guilty conscience
c. Feeling of condemnation d. None of the above

5. Who or what is greater than he that is in the world? (1st John 4:4)

a. Angels b. Overcoming Saints
c. He that is in you. d. All of the above

6. In what is there no fear? (1st John 4:18)

a. Joy b. Love
c. Patience d. Peace

7. What is the victory that overcomes the world? (1st John 5:4)

a. Determination b. Faith
c. Love d. None of the above

8. Who should you NOT bring into your house or bid God speed? (2nd John 9,10)

a. Liars b. Sinners
c. Abideth not in the doctrine of Christ d. Unbelievers

9. To whom was III John written? (3rd John 1)

a. Demetrious b. Diotrophes
c. Gaius d. The elect Lady

10. Who did John say had a good report of all men? (3rd John 12)

a. Demetrious b. Diotrophes
c. Gaius d. The elect Lady


11. Why Didn't John write more in 2nd and 3rd John? (2nd John 12,13, 3rd John 13,14)

a. He ran out of ink b. He wanted to see them & speak
c. His friends would fill in d. All of the above

12. How many verses are there in the book of 1st John?

a. 5 b. 15 c. 25 d. 35


## WHY A CHRISTMAS TREE…?



# WHAT'S HIS NAME...?





## COMPLETE THE ACTIVITY!




## Travel with the Wise Men

Make your way across the desert from the oasis to Bethlehem. Stay on the lighter colored paths and do not cross over rocks, plants or any little desert creatures.



## Prophets Foretold Jesus' Birth Spot the Differences

Compare the picture on the top with the picture on bottom. Circle the **8** things that are different.



**Old Testament Prophets foretold the events of the Birth of Jesus Christ.**

**Which Prophet foretold that the coming Messiah would be called the Prince of Peace? ____________________**

## (ISAIAH 9:1-7)

***MEMORY VERSE:***

***"And His name will be called Wonderful, Counselor, Mighty God, Everlasting Father, Prince of Peace." ISAIAH 9:6***

***The LORD spoke to Isaiah saying...***

***CIRCLE THE CORRECT WORDS:***

1. "The people who walked in darkness have seen a great (**NIGHT**, **LIGHT**)." **ISAIAH 9:2**

2. "Those who dwelt in the land of the shadow of death, upon them a (**FIGHT**, **LIGHT**) has shined." **ISAIAH 9:2**

***FILL IN THE BLANKS:***

3. "For unto us a ___________ is born, unto us a ________ is given." **ISAIAH 9:6**

***TRUE OR FALSE:***

4. "And the government will be upon His shoulder." **ISAIAH 9:6**
   **TRUE** OR **FALSE**

***CIRCLE ALL OF THE CORRECT WORDS:***

5. "And His name will be called..." **ISAIAH 9:6**

| | | |
|---|---|---|
| **Wonderful** | **Counselor** | **Mighty God** |
| **John** | **Everlasting Father** | **Prince of Peace** |

***TRUE OR FALSE:***

6. "Of the increase of His government and peace there will be no end." **ISAIAH 9:7**
   **TRUE** OR **FALSE**

***CIRCLE THE CORRECT WORD:***

7. "The (**ZEAL**, **SEAL**) of the LORD of hosts will perform this." **ISAIAH 9:7**

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below…

1. The theme for the month of December is: ____________________.
2. We understand that the peace brought by Jesus is: ____________________; ______________________; _________________________.
3. 1st John 1:9 says - __________________________________________________ ____________________________________________________________________
4. Isaiah 9:6 says - _______________________________________________________ ___________________________________________________________________.

This Christmas let us celebrate the coming of Jesus! Our Prince of Peace!

God bless,

Mrs. Briliya Jeyaseelan.

# வேத வினாக்கள்

## எசேக்கியேல் 1 - 24 அதிகாரங்கள்
## (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. கேரூபீன்களின் செட்டைகளுடைய இரைச்சல் எப்படி இருக்கிறது?
2. இரு ஸ்திரீகளுக்கு ஒப்பிட்டு சொல்லப்பட்டுள்ளவை எவை?
3. கர்த்தர் எழுதி வைக்க சொன்னது என்ன?
4. எசேக்கியேல் தரிசனத்தில் செய்த ஒன்றை நிஜத்திலும் செய்தார். அது என்ன?
5. பெண் கள்ளத் தீர்க்கதரிசகளைக் குறித்து வாசிப்பது எங்கே?
6. இஸ்ரவேல் வீட்டாரின் ஆத்துமாவின் வாஞ்சை என்ன?
7. யார் நெற்றிகளில் அடையாளம் போட வேண்டும்?
8. எசேக்கியேல் தீர்க்கதரிசனம் சொல்லுகையில் மரித்தவர் யார்?
9. ஜீவன்களுடைய சாயல் எப்படி இருந்தது?
10. கன்மலையைப் பார்க்கிலும் கெட்டியானது என்ன?
11. எத்தனை நாட்கள் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை எசேக்கியேல் சுமக்க வேண்டும்?
12. அகோலிபாள் கர்த்தருக்குரிய எவைகளை தேவன் விரும்பாதவற்றிற்கு பயன்படுத்தினான்?
13. தேவன் எதற்காக ஒரு மனுஷனை தேடினார்?
14. எசேக்கியேல் கண்டவைகளைக் கேட்டவர்கள் யார்?
15. எந்த இரண்டு சம்பவங்களைப் பார்க்கையில் எசேக்கியேல் ஒருவிதமான விண்ணப்பத்தை ஏறெடுத்தார்?
16. அக்கினிச் சாயலாய் தோன்றினவர் எப்படி எசேக்கியேலை எருசலேமுக்குக் கொண்டுபோனார்?
17. சிறைப்பட்டவர்கள் மத்தியில் தேவ தரிசனங்களைக் கண்டவர் யார்?
18. எசேக்கியேல் ஒரு பரிசுத்த ஜீவியம் செய்தார் என்று உணர்த்துகிற வசனம் என்ன?
19. ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள எந்த இடத்தைப் போல கர்த்தர் ஜனங்களுக்கு இருப்பார்?
20. எசேக்கியேல் ஜனங்களுக்கு அடையாளமாக செய்தவைகளில் மிகவும் வேதனையான சம்பவம் என்ன?
21. எதற்காக கர்த்தர் சிலரை மீதியாக வைப்பார்?
22. பெற்றோரின் பாவம் பிள்ளைகளுக்கு வருமா?
23. எங்கே எசேக்கியேல் ஏழு நாட்கள் தங்கினார்?
24. உட்பிரகாரத்தை நிரப்பியது எது?
25. சிங்கம், ஓநாய் - யார் யாரைக் குறிக்கிறது?
26. ஒரே அர்த்தமுள்ள இரு வசனங்கள் எவை?
27. யாராலே எசேக்கியேல் பூமிக்கும், வானத்துக்கும் நடுவாக கொண்டு போகப்பட்டார்?
28. யாரிடத்திற்கு எசேக்கியேல் அனுப்பப்பட்டார்?
29. எசேக்கியேல் 17-ம் அதிகாரத்தில் உள்ள முதல் கழுகு யாரைக் குறிக்கிறது?
30. யாரால் கர்த்தர் கன ஈனம் பண்ணப்படுகிறார்?

## நவம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் எரேமியா 27– 52 |
|---|---|---|
| 1 | அனாமெயேல் | 32:8 |
| 2 | நிலம் | 32:9 |
| 3 | வனாந்தரத்தில் | 31:2 |
| 4 | அவரை நோக்கிக் கூப்பிடுகையில் | 33:3 |
| 5 | சிதேக்கியா | 32:5 |
| 6 | எரேமியா கொடுத்த புஸ்தகம் | 51:63 |
| 7 | அஞ்சறக்காரன், தூதன் | 51: 32 |
| 8 | சிதேக்கியாவின் இராணுவத்தார் | 52:8 |
| 9 | பார்வோன் ஒப்பிரா | 44:30 |
| 10 | இஸ்மவேல் | 41:6 |
| 11 | இஸ்ரவேலின் அக்கிரமங்கள், யூதாவின் பாவங்கள் | 50:20 |
| 12 | எகிப்து | 46:20 |
| 13 | காவற்சேனாபதி | 40:5 |
| 14 | வில் | 50:9 |
| 15 | கர்த்தருடைய வார்த்தையை உரைத்ததால் | 32:5 |

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் எரேமியா 27– 52 |
|---|---|---|
| 16 | கீலேயாத்துக்கு, பிசின் தைலம் வாங்க | 46:11 |
| 17 | நேரியாவின் குமாரனாகிய பாருக்கு | 43:3 |
| 18 | எரேமியா | 33:22 |
| 19 | கல்தேயரிடம் தேசத்தை கர்த்தர் ஒப்புக் கொடுப்பதாய் இருக்க, எரேமியாவை நிலத்தைக் கொள்ளும்படி சொன்னதால் | 32:25 |
| 20 | பாபிலோன் நாட்டில் சிறையிருந்தவர்கள் | 29:14-17 |
| 21 | எரேமியா | 40:4 |
| 22 | குணமாக பிசின் தைலம் கொடுக்கப்பட்டது. என்றாலும் குணமாகவில்லை. | 51:9 |
| 23 | பாருக்கு | 45:2,3 |
| 24 | சுருளனைத்தும் | 36:23 |
| 25 | கெமரியா<br>எலிசாமா<br>பாருக்கு | 36:10<br>36:12<br>36:26 |
| 26 | அபசினியா | 35:3 |
| 27 | மை | 36:18 |
| 28 | கெமரியா என்னும் சம்பிரதியின் அறையிலே | 36:10 |
| 29 | குடங்கள், கிண்ணங்கள் | 35:5 |
| 30 | அவனவன் தன் பொல்லாத வழியை, உங்கள் நடக்கையை | 35:15 |

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.*

## நவம்பர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs. Febell Jeevagi Thomas
2. Mrs. Jebaseeli Asir
3. Mrs. Deepa Vincent
4. Mrs. Sheeba Merlin
5. Mr. Emmanuel Vanya
6. Ms.Persis Seljah
7. Mrs. Sharmila Rajesh
8. Mrs. Sheneega Stanely
9. Mrs.Subija Jino
10. Mrs.Jenis Trison
11. Mrs.Jenila Gnanaraj
12. Mrs. Annie Max
13. Mrs. Percia David
14. Mrs.Annie Vigin
15. Mrs. Shiny Brindha Alwin
16. Mrs. Manuel Sarah Foulkes Moore

## Children who answered November - 2022 Quiz

1. Gabrilyn Hannah
2. Steffi Prisilla
3. Aadhav Steve Matthew
4. Jevlyn Ana
5. Jerilyn Pushpam Nelson
6. Phoebe Rebekah Solomon
7. Jeya Jehosheba Mahear
8. Jeya Joshua Maher
9. Geoffrey Jerome David
10. Danica Dinakaran
11. Delisa Dinakaran
12. Juanita Carys.J
13. Johan Sam Manuel
14. Joha Anit Manuel
15. Adelyn Victoria Jeyaseelan
16. Abryan Gabriel Jeyaseelan
17. Andrew Jones Arun
18. Amy Jazzlyn
19. Leona Juliet .J.B
20. Sam Jesvin
21. Jesse Grace
22. Darion Lemuel
23. Keren Grapeson
24. Abner Theophiilus Grapeson
25. Jen Scudd
26. Jim Scott
27. Giana Elin
28. Liana Erin
29. Johanan Paul Jino
30. Joanna Paul Jino
31. Jonathan Geosper David
32. Leonel I.J. Stalin
33. Linuel I.J. Sherwyn
34. Jessica Eban
35. Janessa Max
36. Shawn Samuel
37. Sheena Samuel

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



### இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி

**14-06-1912 – 20-01-1997**

**திசையை மாற்றிய கர்த்தரின் கரம்**

காலை சிற்றுண்டிக்காகச் சென்றபோது ஆங்காங்கே பயணிகள் கூட்டங்கூட்டமாய்ப் போய்க்கொண்டிருந்தபோது மேரியும், வெர்ஜீனியாவும் எஸ்தரும் தாங்கள் கேட்டதை நம்ப முடியாமல் ஆனந்தித்தனர். பயணித்த போர்க்கப்பல் சிந்துத் துறைமுகம் தாண்டி இந்தியாவின் பம்பாய்க்குச் செல்வதாகவும், பம்பாய் வரை பயணம் மேற்கொள்வோர் பம்பாயில் தானே பயணக்கட்டணம் செலுத்தலாம் என்றும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. **"எங்கே கர்த்தரின் விரல் திசை காட்டுகிறதோ, அங்கே அவர் கரம் வழிநடத்தும்"**. இது சீனாவிற்கு மிஷனரியாகச் சென்ற ஹட்சன் டெயலர் சொன்னது. ஈடித்தின் வாழ்க்கை முழுவதிலும் இது ஒரு பேருண்மை. தனது கனவு பூமியிலேயே கப்பல் கரைதொடுகிறது என்ற செய்தி கேட்ட ஈடித் பெலவீனத்திலும் எழுந்து உட்கார்ந்து விட்டார்.

**இலட்சிய பூமியில் காலடி வைத்தார் ஈடித்**

1945-ம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் நாள். அதன் விடியலோடு விடியலாக பம்பாயின் கரையும் தெரிய ஆரம்பித்தது. கிடைத்தற்கரிய பொருளைப் பற்றிக் கொண்டது போன்ற பரவசம், ஈடித்திற்குத் தாய் வீடு வந்து விட்டது போன்ற தனி இன்பம். பெருமிதம் பொங்க, ஆனந்தக் கண்ணீரில் பார்வை மங்க, மங்கையர் நால்வரும் மேல்தட்டில் நின்று பம்பாயைப் பார்த்துக் கொண்டிருந்தனர். துறைமுகம்

நெருங்க நெருங்க கண்ணில் தென்பட்டதெல்லாம் அலைமோதும் ராணுவக்கூட்டம். காதில் விழுந்ததெல்லாம் குடும்பத்தினரின் ஓலம். ஈடித்தின் நெஞ்சிலோ இமயம் ஏறிவிட்டது போன்ற நிறைவு. கப்பல் கரையில் நங்கூரம் பாய்ச்சியது. 'வந்துவிட்டேன் என் நேச பூமிக்கு' என்ற விவரிக்க முடியாத ஆனந்த நிறைவோடு நின்ற ஈடித்தின் முகத்தில் அந்த துள்ளவைக்கும் சூழ்நிலையிலும் தன்னடக்கம் தெளிவாக விளங்கியது.

நெரிசலுக்கிடையே அவர்களுக்காக கப்பல் அதிகாரிகள் ஒழுங்கு செய்து கொடுத்த இடத்தை அடைந்தனர். நான்கு கட்டில்களைத் தவிர வேறொன்றுமில்லை அந்த அறையில். படுக்கையென்றால், கட்டில், அதன் மேல் பஞ்சு மெத்தை, இழுத்துப் போர்த்திக்கொள்ள மெல்லிய மெத்தை, இதமாக தலைசாய்க்க இலவம் பஞ்சுத் தலையணை. இதுதான் ஈடித் இதுவரை அனுபவித்தது. அவரது லட்சியப் பூமியில் அவருக்குக் கிடைத்ததோ நான்கு சட்டங்களுக்கிடையே நன்றாய் இழுத்துக்கட்டப்பட்டிருந்த நாடாக்கட்டில். இலட்சியத்தின் உறுதியில் நின்றிருந்த அவரை இது அச்சுறுத்தவில்லை. பம்பாயின் மிதமான காலநிலை, பயண அலுப்பு இவையிரண்டும் நால்வரையும் நாடாக்கட்டிலிலும் நன்கு தூங்க வைத்தது. அதிகாலையில் ஒரே சத்தம். என்னவென்று எட்டிப்பார்த்தால் விடிந்ததும் விடியாததுமாக ஓவென மழை பெய்தது. அப்படிப்பட்ட கனமழையைப் பார்த்திராத ஈடித்திற்கு வாளி வாளியாகத் தண்ணீரை வாரியிறைத்தது போலிருந்தது.

கனமழை வெறித்ததும் காலை உணவருந்தச் சென்றனர். இந்திய மண்ணில் சுதந்திரப் பூ பூக்காத நேரமது. எங்கு திரும்பினாலும் பிரிட்டிஷ்காரரும் இராணுவத்தாருமே கூட்டமாய் அலைந்தனர். இந்த நால்வர் அணி ஒரு சிற்றுண்டியகத்திற்குள் நுழைந்தது. அது ஒரு பிரிட்டிஷ் சிற்றுண்டியகம். மனம் விரும்பிய உணவு பரிமாறப்பட்டது. உணவுக்குப் பின் காப்பி வேண்டுமென தெரிவித்தனர். வந்த காப்பியை வாயில் வைத்ததுதான் தாமதம், நால்வரும் பெருவகையில் அதிர்ந்தனர். சுவையணுக்கள் சிணுங்கவில்லை. பெரிதாக ஓலமிட்டன. அவ்வளவு பயங்கரமான சுவை. மழையில் மலைத்து வெளியேறிய கண்கள் காப்பியின் சுவையில் கலங்கின. ஆனால் சொல்லி வைத்தாற்போல் சிரித்துவிட்டனர். "இயேசு படகில் இருக்கையில் நாம் நகைப்போம்" என்று ஒருவர் முணுமுணுக்க அதிர்ச்சி சிரிப்பாக எரிந்து அணைந்தது. இந்தியாவில் இனி ஒருக்காலும் பிரிட்டிஷ் கடைகளில் காப்பி வாங்கக் கூடாதென தீர்மானித்தனர்.

இவர்களைப்போல் ஏற்கெனவே இந்தியாவிற்கு மிஷனரியாக வந்தவர்களில் ஒருவர் சுகவீனமடைந்திருந்தார். அவரைத் தாயகம் அனுப்புவதற்காக அவரை அழைத்துக்கொண்டு பம்பாய் வந்திருந்தார் டாக்டர் எஸ்தர். அவருடனேயே இந்த நால்வரும் இரு நாள் ரயில் பயணம் மேற்கொண்டு சென்னை வந்தடைந்தனர். வழியெல்லாம் இந்தியாவைப்பற்றிய உண்மைகளை, ஏற்றுக்கொள்ளும் வண்ணம், சுவாரசியமாகச் சொல்லிக் கொண்டே வந்தார் டாக்டரம்மா எஸ்தர். சென்னைமுதல் சென்றடையும் இடம் வரை இஅவரே இந்த நால்வரையும் நேர்த்தியாக மற்றவரிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

**- தொடரும்**

# துணுக்குகள்

## பாடல் பிறந்த கதை



**ஓ பெத்லகேமே சிற்றூரே [பாமாலை 60 ]**
**[O Little town of Bethlehem]**

*ஓ பெத்லகேமே சிற்றூரே*
*என்னே உன் அமைதி*
*அயர்ந்தே நித்திரை செய்கையில்*
*ஊர்ந்திடும் வான்வெள்ளி*

*விண் வாழ்வின் ஜோதி தோன்றிற்றே*
*உன் வீதியில் இன்றே*
*நல்லோர் நாட்டம் பொல்லார் கோட்டம்*
*உன் பாலன் இயேசுவே.*

*கூறும், ஓ விடி வெள்ளிகாள்*
*இம்மைந்தன் ஜன்மமே*
*விண் வேந்தர்க்கு மகிமையே,*
*பாரில் அமைதியாம்;*
*மா திவ்விய பாலன் தோன்றினார்*
*மண் மாந்தர் தூக்கத்தில்,*
*விழித்திருக்க தூதரும்*
*அன்போடு வானத்தில்*

***"யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார்" மத் 2 : 6***

நம் ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் பிறந்தபோது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் அவரைத் தேடி, பலஸ்தீனா நாட்டுக்கு வந்து, ஏரோது அரசனின் அரண்மனையில் விசாரித்தபோது, ஏரோது கலக்கமடைந்து, யூதத்தலைவர்களை அழைத்து, கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பார் என்று கேட்டான். அவர்கள் தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருந்தபடி (மீகா 5:2), யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேமில் பிறப்பார் என்றனர். பெத்லகேம் ஒரு சிற்றூர். ஆனால் தாவீது அரசனுடைய வம்சத்தினர் குடியிருந்த ஊர். ஆதலின், யூதருக்கு ராஜாவாகிய கிறிஸ்து அவ்வூரில் பிறந்தது மிகவும் பொருத்தமானது.

1865ம் ஆண்டு, பிலிப்ஸ் புரூக்ஸ் (Phillips Brooks) என்னும் குருவானவர் கிறிஸ்து பிறப்பு தினத்திற்கு முந்தினநாள் இரவில், பலஸ்தீனா நாட்டில் பெத்லகேம் ஊரிலுள்ள ஒரு சிற்றாலயத்தில் ஆராதனைக்குச் சென்றிருந்தார். இவ்வாலயம் கிறிஸ்து பிறந்த இடம் என நம்பப்படுகிற இடத்தில், கான்ஸ்டன்டைன் சக்கரவர்த்தியால் கி.பி. நான்காவது நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஆராதனைக்குமுன் புரூக்ஸ் போதகர் பெத்லகேம் ஊரைச் சுற்றிப்பார்த்து ஊரின் அழகையும், வானத்தில் நட்சத்திரங்களின் தோற்றத்தையும் கண்டு பரவசமடைந்து, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்

கிறிஸ்து பிறந்த இரவில் அவ்வூர் எவ்விதம் இருந்திருக்கவேண்டும் என்று தனது மனக்கண்களில் கண்டார். இக்காட்சி அவர் ஆயுள் முழுவதும் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. நடு நிசியில் ஆராதனைக்கு ஆலயமணியடிக்கவே, அவர் ஆலயத்தினுள் சென்று ஆராதனையில் கலந்துகொண்டார். இவ்வாராதனை அவரை மேலும் பரவசப்படுத்தியது. பின்னர் அவர் தனது சொந்த நாடான அமெரிக்காவிற்குத் திரும்பினார்.

மூன்று ஆண்டுகளுக்குப்பின், புரூக்ஸ் போதகர் பிலடெல்பியா நகரத்தில் தூய திரித்துவ ஆலயத்தின் குருவாக பணியாற்றிவரும்போது, கிறிஸ்து பிறப்புதினத்திற்கு சில நாட்களுக்கு முன் அவரது சபை ஓய்வுநாட்பள்ளிச் சிறுவர் ஒரு கிறிஸ்மஸ் பாடல் எழுதித்தரும்படி போதகரைக் கேட்டனர். உடனே போதகருக்கு, அவர் மூன்றாண்டுகளுக்குமுன் பெத்லகேமில் கழித்த நள்ளிரவு ஞாபகத்துக்கு வந்தது. ஆகவே அவர் பெத்லகேமைக் குறித்த ஒரு பாடல் எழுதத் தீர்மானித்து சிறிதுநேரத்தில், 'ஓ பெத்லகேமே சிற்றூரே' என்னும் பாடலை எழுதி முடித்தார். மறுநாள் அவ்வூர் ஆலயப் பாடகர் தலைவரும், ஓய்வுநாட்பாடசாலை மேற்பார்வையாளருமான லூயி ரெட்னர், போதகரின் அறைக்கு வந்தபோது, இக்கவிகளை அவரிடம் கொடுத்து அதற்கேற்ற ஓர் ராகம் அமைத்துத் தருமாறு கேட்டார். ரெட்னர் வெகுநேரம் முயற்சி செய்தும் நல்ல ராகம் ஒன்று ஒன்றும் அமையவில்லை. கிறிஸ்மஸ் தினத்திற்கு முந்தின இரவு அவர் தூங்கிக்கொண்டிருக்கையில் அவர் காதில் ஓர் ராகம் ஒலிப்பதுபோலக் கேட்கவே அவர் எழுந்து, அருகிலிருந்த ஒரு காகிதத்தில் ராகத்தைக் குறித்துவிட்டு, மறுபடியும் படுத்துத் தூங்கினார். மறுநாட்காலையில் எழுந்து அந்த ராகத்திற்கு இசை (Harmony) அமைத்து, அன்றையத் தினமே பாடசாலைப் பிள்ளைகளைப் பயிற்றுவித்துப் பாடச்செய்தார். இவ்விதமாக ஓர் அழகிய கிறிஸ்மஸ் பாடல் உருவானது.

இப்பாடலை எழுதிய பிலிப்ஸ் புரூக்ஸ் அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் 1835ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 13ம் தேதி பிறந்தார். முதலில் அவ்வூர் ஆரம்பப்பள்ளியில் பயின்று பின்னர் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பி.ஏ. பட்டம் பெற்றார். சில காலம் லத்தீன் மொழி ஆசிரியராகப் பணியாற்றியபின், குருத்துவ ஊழியத்திற்காக வர்ஜினியா திருமறைக் கல்லூரியில் பயிற்சி பெற்றார். 1859 முதல் 1869 வரையில் பிலடெல்பியா நகரில் போதகராகப் பணியாற்றியபின், பாஸ்டன் நகரில் வெகுகாலம் போதகராகத் திருப்பணியாற்றினார். இறுதியில் 1891ல் மாசாசூசெட்ஸ் மாகாணத்தின் அத்தியட்சராக இரு ஆண்டுகள் பணியாற்றினார்.

தமது நீண்டகால ஊழியத்தின்போது அவர் கிறிஸ்துவின் பிறப்பு, உயிர்த்தெழுதல் பண்டிகைக்கான பல பாடல்கள் எழுதியுள்ளார். அவர் 1893ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 23ம் தேதி தமது 58வது வயதில் காலமானார்.

# ஆலய பக்கம்




## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் டிசம்பர் – 2022

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | வெள்ளி | 8.45 pm – 9.45 pm | சிறுவர் கிறிஸ்மஸ் மர விழா – St.Andrew's church |
| | | 9.45 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 4 | ஞாயிறு | 10.00 am – 11.30 am | பெண்கள் கிறிஸ்மஸ் கூடுகை - ஆயர் இல்லம் |
| | | 12.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் - ஆயர் இல்லம் |
| 6 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 9 | வெள்ளி | 9.00 pm – 10.15 pm | கிறிஸ்மஸ் கீத ஆராதனை ஆராதனை – St.Andrew's church |
| 13 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 16 | வெள்ளி | 9.15 pm – 10.15 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 20 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 23 | வெள்ளி | 9.15 pm – 10.15 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 25 | ஞாயிறு | 5.00 am – 6.30 am | கிறிஸ்மஸ் திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 27 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 30 | வெள்ளி | 9.15 pm – 10.15 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| ஜனவரி 1 | ஞாயிறு | 5.00 am – 6.30 am | புது வருட திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |

[கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு]



# BIBLE READING FOR CHILDREN – DECEMBER 2022



| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.12.22 | LUKE | 7 : 18 – 23 |
| 2.12.22 | LUKE | 7 : 24 – 30 |
| 3.12.22 | LUKE | 7 : 31 – 35 |
| 4.12.22 | LUKE | 7 : 36 – 43 |
| 5.12.22 | LUKE | 7 : 44 – 50 |
| 6.12.22 | LUKE | 7 : 1 – 8 |
| 7.12.22 | LUKE | 8 : 9 – 15 |
| 8.12.22 | LUKE | 8 : 16 – 21 |
| 9.12.22 | LUKE | 8 : 22 – 25 |
| 10.12.22 | LUKE | 8 : 26 – 31 |
| 11.12.22 | LUKE | 8 : 32 – 39 |
| 12.12.22 | LUKE | 8 : 40 – 45 |
| 13.12.22 | LUKE | 8 : 46 – 50 |
| 14.12.22 | LUKE | 8 : 51 – 56 |
| 15.12.22 | LUKE | 9 : 1 – 9 |
| 16.12.22 | LUKE | 9 : 10 – 17 |
| 17.12.22 | LUKE | 9 : 18 – 27 |
| 18.12.22 | LUKE | 9 : 28 – 36 |
| 19.12.22 | LUKE | 9 : 37 – 43 |
| 20.12.22 | LUKE | 9 : 44 – 50 |
| 21.12.22 | LUKE | 9 : 51 – 56 |
| 22.12.22 | LUKE | 9 : 57 – 62 |
| 23.12.22 | LUKE | 10 : 1 – 6 |
| 24.12.22 | LUKE | 10 : 7 – 12 |
| 25.12.22 | LUKE | 10 : 13 – 16 |
| 26.12.22 | LUKE | 10 : 17 – 24 |
| 27.12.22 | LUKE | 10 : 25 – 30 |
| 28.12.22 | LUKE | 10 : 31 – 37 |
| 29.12.22 | LUKE | 10 : 38 – 42 |
| 30.12.22 | LUKE | 11 : 1 – 6 |
| 31.12.22 | LUKE | 11 : 7 – 13 |



## தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - டிசம்பர் 2022

| தேதி | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|
| 1 | வியாழன் | ஆதி. 25 : 1 – 11 | மத்தேயு 9 : 1 – 13 |
| 2 | வெள்ளி | ஆதி. 25 : 12 – 26 | மத்தேயு 9 : 14 – 26 |
| 3 | சனி | ஆதி. 25 : 27 – 34 | மத்தேயு 9 : 27 – 38 |
| 4 | ஞாயிறு | ஆதி. 26 : 1 – 12 | மத்தேயு 10 : 1 – 15 |
| 5 | திங்கள் | ஆதி. 26 : 13 – 25 | மத்தேயு 10 : 16 – 31 |
| 6 | செவ்வாய் | ஆதி. 26 : 26 – 35 | மத்தேயு 10 : 32 – 42 |
| 7 | புதன் | ஆதி. 27 : 1 – 15 | மத்தேயு 11 : 1 – 19 |
| 8 | வியாழன் | ஆதி. 27 : 16 – 29 | மத்தேயு 11 : 20 – 30 |
| 9 | வெள்ளி | ஆதி. 27 : 30 – 46 | மத்தேயு 12 : 1 – 14 |
| 10 | சனி | ஆதி. 28 : 1 – 9 | மத்தேயு 12 : 15 – 32 |
| 11 | ஞாயிறு | ஆதி. 28 : 10 – 22 | மத்தேயு 12 : 33 – 42 |
| 12 | திங்கள் | ஆதி. 29 : 1 – 14 | மத்தேயு 12 : 43 – 50 |
| 13 | செவ்வாய் | ஆதி. 29 : 15 – 35 | மத்தேயு 13 : 1 – 9 |
| 14 | புதன் | ஆதி. 30 : 1 – 12 | மத்தேயு 13 : 10 – 17 |
| 15 | வியாழன் | ஆதி. 30 : 13 – 24 | மத்தேயு 13 : 18 – 33 |
| 16 | வெள்ளி | ஆதி. 30 : 25 – 43 | மத்தேயு 13 : 34 – 46 |
| 17 | சனி | ஆதி. 31 : 1 – 11 | மத்தேயு 13 : 47 – 58 |
| 18 | ஞாயிறு | ஆதி. 31 : 12 – 21 | மத்தேயு 14 : 1 – 12 |
| 19 | திங்கள் | ஆதி. 31 : 22 – 32 | மத்தேயு 14 : 13 – 21 |
| 20 | செவ்வாய் | ஆதி. 31 : 33 – 42 | மத்தேயு 14 : 22 – 36 |
| 21 | புதன் | ஆதி. 31 : 43 – 55 | மத்தேயு 15 : 1 – 9 |
| 22 | வியாழன் | ஆதி. 32 : 1 – 11 | மத்தேயு 15 : 10 – 28 |
| 23 | வெள்ளி | ஆதி. 32 : 12 – 21 | மத்தேயு 15 : 29 – 39 |
| 24 | சனி | ஆதி. 32 : 22 – 32 | மத்தேயு 16 : 1 – 12 |
| 25 | ஞாயிறு | ஆதி. 33 : 1 – 10 | மத்தேயு 16 : 13 – 28 |
| 26 | திங்கள் | ஆதி. 33 : 11 – 20 | மத்தேயு 17 : 1 – 13 |
| 27 | செவ்வாய் | ஆதி. 34 : 1 – 15 | மத்தேயு 17 : 14 – 27 |
| 28 | புதன் | ஆதி. 34 : 16 – 31 | மத்தேயு 18 : 1 – 14 |
| 29 | வியாழன் | ஆதி. 35 : 1 – 15 | மத்தேயு 18 : 15 – 35 |
| 30 | வெள்ளி | ஆதி. 36 : 16 – 29 | மத்தேயு 19 : 1 – 15 |
| 31 | சனி | ஆதி. 36 : 1 – 19 | மத்தேயு 19 : 16 – 30 |

# ஆராதனை பாடல்கள் - டிசம்பர் 2022

| | |
|---|---|
| **02-12-22** | |
| பாமாலை - 267 | போற்றும் போற்றும் |
| பாமாலை - 258 | இயேசுவே உம்மை |
| கீர்த்தனை – 210 | சத்திய வேதத்தை தினம் தியானி |
| பாமாலை – 194 | தூய பந்தி சேர்ந்த கைகள் |
| **09-12-22** | |
| பாமாலை - 61 | பக்தரே வாரும் |
| | Joy to the world |
| கீர்த்தனை – 32 | ஆர் இவர் ஆராரோ |
| பாமாலை - 59 | ஒப்பில்லா திரு இரா |
| **16-12-22** | |
| பாமாலை - 24 | மா மாட்சி கர்த்தா |
| பாமாலை - 49 | களிகூரு சீயோனே |
| கீர்த்தனை – 22 | அதி மங்கள காரணனே |
| கீர்த்தனை – 77 | சீர் ஏசு நாதனுக்கு |
| **23-12-22** | |
| பாமாலை - 21 | சேனையின் கர்த்தா |
| பாமாலை - 52 | நீர் வாரும் கர்த்தரே |
| கீர்த்தனை – 29 | மேசியா ஏசு நாயனார் |
| மங்கள கவி | கர்த்தர் தந்த ஈவுக்காக |
| **25-12-22** | |
| பாமாலை - 62 | கேள் ஜென்மித்த |
| பாமாலை - 72 | ராக்காலம் பெத்லேம் |
| கீர்த்தனை – 28 | சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து |
| பாமாலை - 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| **30-12-22** | |
| பாமாலை - 83 | நீர் தந்த நன்மை யாவையும் |
| பாமாலை - 82 | இம்மட்டும் ஜீவன் தந்த |
| கீர்த்தனை – 217 | அன்பே பிரதானம் |
| கீர்த்தனை – 322 | சூரியன் மறைந்து |

## திருமறை பாட ஒழுங்குகள் - டிசம்பர் 2022

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-12-22 | தேவனுடைய வார்த்தை : இருபுறம் கருக்குள்ள பட்டயம் | எரேமியா 36:1-10 | எபிரேயர் 4:11–13 | லூக்கா 1:5 - 17 | - |
| 09-12-22 | வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இம்மானுவேல் | ஏசாயா 7 :10 - 17 | *1* பேதுரு 3:8 – 16 | மத்தேயு 1:18 - 25 | 85 |
| 16-12-22 | கர்த்தரின் வருகைக்கான ஆயத்தம் | மீகா 4 :1 - 5 | *1* யோவான் 4:7-21 | யோவான் 4:21 - 37 | - |
| 23-12-22 | மார் தோமா ஆலய தினம் | ஏசாயா 22 :20 - 24 | பிலிப்பியர் 3:12- 21 | யோவான் 14:1 - 14 | 100 |
| 25-12-22 | கிறிஸ்துமஸ் – கிருபையின் மேல் கிருபை | உபாகமம் 6 : 1 - 9 | எபேசியர் 2:4 - 9 | மத்தேயு 2:13 - 23 | - |
| 31-12-22 | கர்த்தர் நல்லவர் வாருங்கள் | நாகூம் 1 : 1 - 5 | *1* பேதுரு 2:1 – 10 | யோவான் 7:37 - 39 | 34: 1 - 10 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக் குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 06-12-22 | சங்கீதம் | 75 | TCA<br>8pm to 9pm |
| 13-12-22 | சங்கீதம் | 76 | Al Wadha<br>8pm to 9pm |
| 20-12-22 | சங்கீதம் | 77 | Muroor<br>8pm to 9pm |
| 27-12-22 | சங்கீதம் | 78 | Mussafah<br>8pm to 9pm |

# BIRTHDAY - DECEMBER 2022




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Ms. | Kathryn Joan |
| 2 | Master | Ajay Saul |
| 2 | Mr. | Samuel Leslie |
| 3 | Ms. | Delisa |
| 3 | Mr. | Pradeep Kumar K |
| 5 | Master. | Hadriel Adventier |
| 5 | Mr. | Nithyiya Kirubakaran.T. |
| 11 | Baby | K. M. Andrea Kim |
| 12 | Baby | Katelynn Anne Berlik |
| 13 | Ms. | Dixcy Veena |
| 13 | Mrs. | Jinitha Raja |
| 14 | Mr. | Sathia Saul Raj P S |
| 14 | Mrs. | Priya Irene Elizabeth Ranjithkumar |
| 14 | Mr. | Sahaya Selvan |
| 15 | Mr. | Jebin Job. P |
| 19 | Mrs. | Kasthuri Johnson |
| 19 | Ms. | Hannah Sangeetha Paul |
| 20 | Mrs. | Sheeba Jani |
| 21 | Mr. | Manikandan |
| 22 | Ms. | Shiney Pricillal Samuel |
| 22 | Mr. | Abishek Naveen |
| 25 | Mr. | Prasanna Sekaran |
| 26 | Mrs. | Mary Joseph |
| 29 | Mrs. | Jeniha Beeshow |
| 29 | Mr. | Thomson Gnanamam Santhosh |
| 30 | Baby. | Clifford Dave |
| 30 | Mr. | Kingsly Ambrose |
| 31 | Mrs. | Angeline Sharmila Jeri Rajkumar |

# WEDDING ANNIVERSARY - DECEMBER 2022




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 4 | Mr. & Mrs. | Julian Christian. D |
| 9 | Mr. & Mrs. | Easter Rajesh |
| 11 | Mr. & Mrs. | Lipny Gilbert |
| 12 | Mr. & Mrs. | Jayaraj Robinson |
| 13 | Mr. & Mrs. | Kingsly Ambrose |
| 14 | Mr. & Mrs. | Manikandan |
| 14 | Mr. & Mrs. | Thiyagu Murugaraj |
| 18 | Mr. & Mrs. | Chris Lilian Vasantha Prince |
| 19 | Mr. & Mrs. | Berlik Jacob |
| 20 | Mr. & Mrs. | Prince Samuel |
| 21 | Mr. & Mrs. | Arul Sugirson Samuel. K |
| 22 | Mr. & Mrs. | Sam Winston |
| 22 | Mr. & Mrs. | Felix Dayamoni. I |
| 27 | Mr. & Mrs. | Vino Thampiraj |
| 27 | Mr. & Mrs. | Carmel Beeshow |
| 27 | Mr. & Mrs. | Subin Raj |
| 28 | Mr. & Mrs. | Anti Grapeson D |
| 28 | Mr. & Mrs. Dr. | Manoj Kumar Jayaraj |
| 29 | Mr. & Mrs. | Paul Emerson Karunakaran |
| 29 | Mr. & Mrs. | David Crishanth Alexander |
| 29 | Mr. & Mrs. | Abishek Naveen |
| 30 | Mr. & Mrs. | David Paulraj. S |
| 30 | Mr. & Mrs. | Jebin Job. P |
| 30 | Mr. & Mrs. | Kins. R |

# CHILDREN'S SERVICE













Harvest Festival




















00:20



































EMMANUEL
God
with us